தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன், Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28-2-2017

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலைகழக மாணவருக்கு – 2016க்கான சிறந்த மாணவர் தேசிய விருது**

கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்கம் மற்றும் ஊரக சமூகவியல் துறை முனைவர் பட்ட ஆராய்ச்சியாளர் மற்றும அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்க மாநில தலைவர் திரு. ப. சிவராஜ் தேசிய அளவில் 2016-ம் ஆண்டிற்கான சிறந்த மாணவர் விருதை 20-2-2017 அன்று நடைபெற்ற இரண்டாம் தேசிய இளைஞர் மாநாட்டில் பெற்றார்.

மாண்புமிகு ஸ்ரீ சி.ஆர் சௌத்ரி மத்திய அமைச்சர், நுகர்வோர், உணவு மற்றும் பொது வினியோகம் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள் தேர்வு ஆணைய தலைவர் முனைவர் குருபச்சன் சிங் அவர்களிடமிருந்து இவ்விருதை பெற்றார். இம்மாநாடு வேளாண்மை அறிவியல் பல்கலைக்கழகம், ரெய்சூரில் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமம் மற்றும் அகில இந்திய வேளாண் மாணவர்கள் சங்கத்தால் இணைந்து நடத்தப்பட்டது.

மாணவர்கள் நலன்சார்ந்த செயல்களில் அவர் ஆற்றிய பணிகளுக்காகவும், வேளாண்மையில் இளைஞர்களின் முன்னேற்றத்தில் அவரின் பங்களிப்பிற்காகவும் இவ்விருது வழங்கப்பட்டது.

மக்கள் தொடர்பு அலுவலர்